# மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும்

இதயகுமாரி.சி[1], சஜானா.எ[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது மனிதவாழ்வில் மந்திரச்சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும் எனும் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளின் செல்வாக்கு, மந்திரச் சடங்குகளில் செய்வினைச் சடங்குகளின் முக்கியத்துவம், அதன் வகைகள், உளவியலில் மந்திரச் சடங்குகளின் தாற்பரியம் முதலியனவற்றை அறிதலை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. “மந்திரம் என்பது ஒரு மாயையை உண்டாக்கி அதனால் இயற்கையை உண்மையாகவே கட்டுப்படுத்துவதாக நம்புவதாகும்” என கார்டன் சைல்ட்டு குறிப்பிடுகின்றார். ஆ.சிவசுப்பிரமணியன் “பாவனைச் செயல்களையும் கட்டளையிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது மந்திரம்” எனச் சுருக்கமாக முன்மொழிந்தார். தனக்கு விருப்பமில்லாத ஒருவன் எல்லா வழிகளிலும் கெட்டழிந்துபோகச் செய்யப்படும் மாந்திரிக முறையே செய்வினை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. அறிவியல் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பு, மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலத்தில் இயற்கையின் சீற்றத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சூழலில் இருந்தனர். அப்போது மனிதன் தன்னைச் சுற்றி இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என்று நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் பலன்களைப் பெற முயற்சித்தான். பின்னர் அவ்வாற்றலைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டான். இவ்வாறு கையகப்படுத்திய ஆற்றலைச் சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் பெறலாம் என்று நம்பினான். அதுவே செய்வினை – மந்திரச் சடங்காக அழைக்கப்படுகின்றது. செய்வினை என்பது மக்கள் வாழ்வில் நம்பிக்கை அடிப்படையில் வளர்ச்சி அடையும் ஒரு விடயமாகும். இயலாமை நிலை, தேவை நிலை அடிப்படையிலேயே செய்வினைகளும் பரிகாரச் செய்வினைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நம்பிக்கையானது நாட்டுப்புற மக்களில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற சில அசௌகரியங்களுக்கு இச்செய்வினையே காரணம் என நம்புகின்றான். இதற்கு எதிரான செய்வினைச் சடங்குகளைச் செய்து தன்னைப் பீடித்த ஒன்றை நீக்கிவிட்டதாக நம்புகின்றான். செய்வினை மந்திரோபாயங்கள் சமயம்சார் அம்சமாக இருந்தாலும் இவை உளவியலுடன் ஒப்பிடும்போது ஒரு வகையான மூட நம்பிக்கையாகவே இருந்து வருகின்றன. மந்திரச் சடங்குகளின் நம்பிக்கைகள் நம்பிக்கை உடையவர்களுக்கு உரியது. இம்முறை சமயம் கடந்தது. இவை உள ரீதியான நம்பிக்கையின் அடிப்படையில் எழுவதோடு இதில் உளவியல் ரீதியிலான தாற்பரியங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** மனிதன், வாழ்க்கை,  சடங்கு, மந்திரம், உளவியல்

யாழ்ப்பாணப்  பல்கலைக்கழகம்
1. rsrsantony2000@gmail.com